1986 நவம்பர் 21] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1972–73-ஆம் ஆண்டிற்கான முன்னறிக்கைமீது பொதுக் கணக்குக் குழு அளித்த இரண்டாவது அறிக்கையில் (ஆறாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பத்தாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் மூன்றாவது அறிக்கையில் (எட்டாவது பேரவை) அளித்துள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை.

(ஆ) புதுப் பணித் திட்டம் நிதி ஒதுக்கத்திற்கு மேல் செலவாகியுள்ள புதுப் பணித் திட்டங்கள் பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை.

(இ) மிகைச் செலவை முறைப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் குறித்துப் பொதுக் கணக்குக் குழு (1983–84) அளித்த 25-ஆம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைபற்றிய மேற்படி குழுவின் நாற்பதாவது அறிக்கை.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை, குழுத் தலைவரின் சார்பாக திருமதி பா. வளர்மதி அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை பொது நிறுவனங்கள் குழுத் தலைவரின் சார்பாக நான் அவைக்கு அளிக்கிறேன்.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977–78 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980–82) பதினைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைபற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி ஐந்தாவது அறிக்கை.

(முற்பகல் 10–40.)

(இ) அரசு உறுதி மொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அக்குழுத் தலைவரின் சார்பாக திரு. பொ. உத்திராபதி அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

[1986 நவம்பர் 22

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் கீழ்காணும் அறிக்கையை அரசு உறுதி மொழிக் குழுத் தலைவரின் சார்பாக நான் அவைக்கு அளிக்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1986—87-ஆம் ஆண்டுக்கான அரசு உறுதி மொழிக் குழுவின் மூன்றாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள்) நியமனத் திருத்தச் சட்ட முன்வடிவு 1986

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்ய அனுமதி கேட்கப்பட்டிருக்கிற 1986 ஆம் ஆண்டு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவை, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீடிப்பதற்குக் காரண காரிய விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிற காரணம், '' 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு முப்பதாவது சட்டம்) தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் 1983-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் நாளன்று வெளியிடப்பட்டது. அதன் கீழ் விதிகளை வகுக்கவும், வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தவும் இன்னும் சில காலம் ஆகுமாதலால் ....'' என்று இன்டெஃபெனட் டைம் போட்டு விளக்கம் கொடுக்கப்பட்டு வெகுகாலம் ஆகிவிட்டதால் இன்னும் தெளிவான நிலை ஏற்படாததால், பொது மக்களுடைய, மக்கள் பிரதிநிதிகளுடைய ஜனநாயக நாற்றங்கால் என்று சொல்லக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு விரைவிலே தேர்தலே நடத்தாமல் இருப்பதால் அறிமுக நிலையிலேயே நான் இதை எதிர்க்கிறேன்.